# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# பத்தாம் பத்து

## எட்டாம் திருமொழி - காதில் கடிப்பு
## க்ருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு 5
## [ஆய்ச்சி ஒருத்தி கண்ணனோடு ஊடுதல்]

** காதில் கடிப்பிட்டுக் * கலிங்கம் உடுத்து *
தாது நல்ல * தண்ணந்துழாய் கொடணிந்து **
போது மறித்துப் * புறமே வந்து நின்றீர் *
ஏதுக்கு இதுவென்? * இதுவென் இதுவென்னோ? 1

துவர் ஆடை உடுத்து * ஒரு செண்டு சிலுப்பி *
கவர் ஆக முடித்துக் * கலிக் கச்சுக் கட்டி **
சுவர் ஆர் கதவின் புறமே * வந்து நின்றீர் *
இவர் ஆர் இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 2

கருளக் கொடி ஒன்றுடையீர்! * தனிப் பாகீர் *
உருளச் சகடம் அது * உறக்கில் நிமிர்த்தீர் **
மருளைக் கொடு பாடி வந்து * இல்லம் புகுந்தீர் *
இருளத்து இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 3

நாமம் பலவும் உடை * நாரண நம்பீ! *
தாமத் துளபம் * மிக நாறிடுகின்றீர் **
காமன் எனப் பாடி வந்து * இல்லம் புகுந்தீர் *
ஏமத்து இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 4

சுற்றும் குழல் தாழச் * சுரிகை அணைத்து *
மற்றும் பல * மாமணி பொன் கொடணிந்து **
முற்றம் புகுந்து * முறுவல் செய்து நின்றீர் *
எற்றுக்கு இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 5

ஆன் ஆயரும் * ஆநிரையும் அங்கொழிய *
கூன் ஆயதோர் * கொற்ற வில் ஒன்று கை ஏந்தி **
போனார் இருந்தாரையும் * பார்த்துப் புகுதீர் *
ஏனோர்கள் முன் என்? * இதுவென்? இதுவென்னோ? 6

மல்லே பொருத திரள் தோல் * மணவாளீர்! *
அல்லே அறிந்தோம் * நும் மனத்தின் கருத்தை **
சொல்லாது ஒழியீர் * சொன்ன போதினால் வாரீர் *
எல்லே! இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 7

புக்கு ஆடரவம் * பிடித்தாட்டும் புனிதீர்! *
இக்காலங்கள் * யாம் உமக்கு ஏதொன்றும் அல்லோம் **
தக்கார் பலர் * தேவிமார் சால உடையீர் *
எக்கே! இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 8

ஆடி அசைந்து * ஆய் மடவாரொடு நீ போய் *
கூடிக் குரவை பிணை * கோமளப் பிள்ளாய்! **
தேடித் திருமாமகள் * மண்மகள் நிற்ப *
ஏடி! இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 9

** அல்லிக் கமலக் கண்ணனை * அங்கோர் ஆய்ச்சி *
எல்லிப் பொழுது ஊடிய * ஊடல் திறத்தை **
கல்லின் மலி தோள் * கலியன் சொன்ன மாலை *
சொல்லித் துதிப்பார் அவர் * துக்கம் இலரே 10

**அடிவரவு:** காதில் துவர் கருளக்கொடி நாமம் சுற்றும் ஆனாயர் மல்லே புக்கு ஆடி அல்லி புள்ளுரு

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---